90

உ

ஸ்ரீ ராமஜெயம்.

கொப்புடையம்மன் துணை.

# ஸ்ரீராமாவதாரம்.



காரைக்குடி நாகநாதபுரம்

சரஸ்வதியம்மாளால்

இயற்றப்பட்டு

காரைக்குடி

பாஸ்கரன் அச்சுக்கூடத்தில்,

பதிப்பிக்கப்பெற்றது.

1928 [அணா 8.

22 NOV 1928

Q22:417
1428
168444

உ

ஸ்ரீ ராமஜெயம்

# ஸ்ரீ ராமாவதாரம்.

22 NOV 1928

(1-வது கட்டம்) முத்துக்குமாரையனே என்றமெட்டு.

பல்லவி.

ஸ்ரீ ராமாவதாரம் எடுத்தார்-ராக்ஷஸகுலரை ஜெயித்திட (ராமா)

அநுபல்லவி.

1. மைந்தன் ராமரைக்கண்டு கௌசலை மகிழ்ந்து
ஆனந்தம்கொண்டு அவர்தெரிசனம் தனைக்கண்டு
தேவி மூவருக்கும் ராமலெக்ஷ்மணர் பரதசத்ருக்கருடன் ()
2. வசிஷ்டர் கௌசிகர்வந்து தசரதரை வருகவேணும் ரகு
ராமர்-அவர் தருகவேணு அனுக்கிரகம் வந்து எந்தனுட
யாகம்தன்னை நிறைவேற்றிவைக்கவேணும் (ரா)
3. யாகம்தன்னை நிறைவேற்றி அகலிகை சாபம்தன்னையும்தீர்த்து
அனைவாகளையும் கார்த்து
அன்னை ஜானகியை மாலைசூடிட ராமராய்வந்த மூர்த்தி (ரா)
4. மிதுலை ஜானகியை வில்லை முறித்து மணமாலை சூடவந்த
ராமா கௌசல்யாராமா கோதண்டராமா பட்டாபி (ராமா)

(2-வது கட்டம்) பேயாண்டி தனைவேண்டி என்றமெட்டு.

பல்லவி.

கல்யாணம் செய்துகொண்டார் கௌசல்யாராமரும்
காக்ஷியுள்ள ஜானகியை (கல்யா)
மிதுலை தன்னிலுதித்து மெல்லி ஜானகிதன்னை வில்லை முறித்தா
னந்த மங்களமாலை சூடினார் (கல்)

சரணம்.

மங்கை ஜானகிதன்னை மகிழ்ந்து மாலை சூடினார்
மந்தகாசத்துடன் மன்னன் ரகுராமர்—சகல ஜனத்துடன்

600 008.



தோஷத்துடன் கூட விந்தையுடன் ஆனந்த
மங்களமாலை சூடினர் (கல்யா)

(3-வது கட்டம்) தோந்திசரிய மயிலே என்றமெட்டு.

பல்லவி

1. மகுடமுடி சூட்ட ராமருக்கு மங்களமூர்த்தம் பார்த்து
தேச தேசமெங்கும் தசரதர் சேதியுரைத்தாராம்
2. கேட்டுக் கூனியவளும் கைகேகியிடம் க்லேசம்
மிக்கக்கொண்டு உன் ஆசை மைந்த பரதன் முடி
தரிக்காமல் மோசம் போனயே
3 ஆதியில் கேட்டவரம் ரெண்டும் அனுக்கிரகித்துக்
கொள்ளுவாயே அபிராமரை ஆரண்யத்துக்கேகியே
முடிதரிப்பாயே.

(4-வது கட்டம்) பாலாபிஷேக பழனிமலையப்பன் என்றமெட்டு

பல்லவி.

1. ஆதியிலேநாதா தந்தவரம் அபிராமரும்
ஆரண்யம் செல்லவேணும்
2. பார்முழுதும் பரதன் பட்டம் ஆளவேணும்
எந்தன் பார்வேந்தன் முடி தரிக்கவேணும்
3. வஞ்சிக்கொடியே மின்னரசே மன்னன் ராமன்வனம்
செல்லவேண்டாம், மங்கையரே உன் மைந்தனுக்கு
மகுடமுடி தன்னைச் சூட்டிக்கொள்வாய் (ஆதி)

(5-வது கட்டம்) திருநூறு நாட்க்கள் என்றமெட்டு

பல்லவி.

1. தாயா உன் வாக்கினால் அளித்தவரமதைத் தவராலே வனம்
நடப்பேனே தந்திடுவாயிப்போ மரவுரி தன்னையே
அணிந்து ஆரண்யம் நடப்பேனே (தா)
2. தகதகவென்று மரவுரியணிந்து தம்பிசீதையுடன் நடந்தாராம்
தவசிகளுக்கு தெரிசனம் கொடுக்க தாஸன்
ரகுராமன் நடந்தாராம்

(6-வது கட்டம்) ஆயேஸையா என்றமெட்டு

1. அன்னை கேட்ட வரமதினால் அபிராமர் வனம் நடந்தார்

அநுபல்லவி.

தேவி ஜானகியுடன் கூடி ஸ்ரீ லெக்ஷுமணர் வாரார்
சிங்காரமாயிருக்கும் வனம் தன்னைநாடி ராமர் (அ)

சரணம்.

அன்னமே என்மைதலியே அழகுள்ள வனத்தைப்பாராய்
பழங்கள் இருக்கிறதைப்பாராய் கிளிகளையும் பாராய்
அற்புதமாயிருக்கும இங்குள்ள வனத்தைப்பாராய் (அ)

(7-வது கட்டம்) காலிமேய்த்த என்றமெட்டு.

பல்லவி.

ஜானகியே மைதலியே இங்கிருக்கும் வனத்தைபபாராய்
மான் கரடி யானை சிங்கம் அதனுடைய அழகைப்பாராய்
2. தேவியரே சீதைபரே சித்ராகூடம் அழகைப்பாராய்
சிங்காரமாக விளங்கும் தம்பி லெக்ஷ்மணபாராய்
3. தெண்டகாவனத்தில் வந்து ரிஷிகளுக்கு
ஸேவைதந்து பஞ்சவடி தன்னில்வந்து பர்னசாலை அமைத்து
4. வீற்றிருக்கும்போது அங்கே வேஷங்கொண்டு சூர்ப்பனகை
வந்தாளங்கே சிங்காரமாய் வீற்றிருக்கும் ராமரிடம் (ஜா)

(8-வது கட்டம்) சிந்தயமா என்றமெட்டு.

பலலவி.

ஜெகமெங்கிலும் கண்டதில்லை நானே
சிரிங்கார ஒய்யார தீரனே. (ஜெக)

அநுபல்லவி.

1. உலகமுழுதெங்கிலும் காணேன் உன்னைப்போல் வடிவழகு
எந்தனுக்கேற்ற இசைந்தமணவாளன்
யோர்வயுள்ள மன்னு சுந்திர தீரனே (முடுகு)
மந்தகாசமுக வடிவழகானே எந்தனுக்கேற்ற மணவாளன்
தானே உன் செங்கமலத் திருகைகளினாலே
சிரிங்காரமாலை யணிந்திடுவாயே (ஜெக)

2. மருவியே வந்த மங்கையர்தன்னை விரும்பியே
மனம் சிந்தையில்லாமல் எந்தனைக்கூடி
இன்பம் தரவேணும் ஸரஸசல்லாபமாக ஒய்யாரனே
மூடுரு மந்தகாச முகவசு வழகானே
எந்தனுக்கேற்ற மணவாளன் தானே
உன் செங்கமலத் திருகைகளினாலே சிரிங்கார
மாலையணிந்திடுவாயே (ஜெக)

(9-வது கட்டம்) எபுடேக்ருபாகல் கூனு என்றமெட்டு

பல்லவி.

எந்தனை இச்சை கொள்ளாதே பங்கையே இங்கே நில்லாதே (எந்)

அநுபல்லவி.

தவசிகளைக் காக்கவந்த தாசன் ரெகுராமச்சந்திரன்
மோசக்தனமாக வந்த லெங்கேசன் தங்கையாளே (எந்)

சரணம்.

தெசமுகன் தங்கைசெல்வி சேர்ந்து மணம்புரிய
ஓடிவந்த மங்கையர்மேல் மோடிசெய்திடலாகுமா
கூடிமாலையணிவோம் சோலாகாலத்துடனே (எந்)

2-வது சரணம்.

வாதுசெய்யும்போது அந்த தீரரெகுராமர் தம்பி
சிங்கம் அவர் பங்கம்செய்து சிரிங்காரமாய் வீற்றிருந்தார்
தெச முகன் தங்கையாளும் தென்னிலங்கை
தன்னில் சென்றாள் [எந்]

(10-வது கட்டம்) நலங்கிடவாரும் பிராணநாதா என்றமெட்டு.

பல்லவி.

1. பங்கமான அந்த சூர்ப்பனகியாளும் பரவசமாக வந்து
அஷ்டஜெக மணிந்த ப்ரதாபலெங்கேசனே அதிசயம்
கேளிரோ

2. பஞ்சவடிதன்னில் சிங்கம்போலே யிருபேர் பாரியுடனே
கூடி மங்கையைப்போலே நான் எங்கிலும் கண்டதில்லை
மகிமையைக்கேளுமோ. (பங்க)

3. உந்தனுக்காக நான் அந்த சகியாளை சிந்தையில்ப்
ரீதிகொண்டு சென்றவளென்னை சின்னப்படச் செய்தான்
மன்னவனிருபேரும் (பங்)

(11-வது கட்டம்) நாதனை நலங்கிட உன் என்றமெட்டு.

மாது அன்னை ஜானகியைப்போ லெங்கிலும் காணேன்
அவளழகுபோலே யாரும் காணேன்
மின்னலைப்போல் மின்னும் அவள் மேனியுடகாந்தி
சுந்திரமாக விளங்குராளே
தங்கநிற மேனியந்த ஜானகியைப்போலே
தரணிதனில் நானும் கண்டதில்லே
கேட்டபக்கன் ஜானகிமேல் கிலேசமிகக்கொண்டு
மோகமாக எண்ணம்கொண்டு நின்றான் (மா)

(12-வது கட்டம்) திருச்சேர்வை என்றமெட்டு.

பல்லவி.

இன்னும் அந்த மன்னருட வடிவுகளைச் சொல்லுகிறேன்
எந்தனுட லெங்கேசா (இ)

அ

அயோத்தியாளும் தெசரதராம்
மைந்தன் ரெகுராகவராம் (இன்னும்)

ச.

1. மந்தகாச முகத்தழகும் மன்மதன்போல்
வடிவுகளும் என்னவென்று சொல்லுவேன்
நான் எந்தனுட லெங்கேசா
பஞ்சவடி தீரமதில் பர்ணகாசாலே அமைத்து
பங்கையுடன் வாசம்செய்யும் சிங்காரங்க
ளென்ன சொல்லுவேன் (இ)

2. வளைந்த நாமமும் பணிந்தபுஜமும் கையிலம்பும் வில்லும்
மறையுறியணிந்து தவசியைப்போல் வாசம் செய்யும்
ஜானகியாள் மணவாளன் இணைபிரியாத்தம்பியுடன்போற்ற
மங்கை சிதையுடன் வீற்றிருக்கும் விந்தைகளை
பார்த்துவந்தேன் லெங்கேசா (இ)

(13-வது கட்டம்) புள்ளிக்கலபமயில் என்றமெட்டு.

பல்லவி.

1. எந்தனுட தங்கையான மங்கையரை எப்படிக்காணுவேனந்த
மானை நானும் எப்படிக்காணுவேனந்தமானை
சொன்னவுடனே எந்தன் சிந்தைதனிலே
மோகம்கொண்டேன் மையல்கொண்டேன் (எ)

2 தென்னிலங்கையாளும் தீரன் இந்த ஜெகத்துக்கு
எல்லாமதிகாரன் அஷ்ட்ட கெஜபணிந்தப்ரதாப
லெங்கேசனென்று கொண்டேன் பேர்கொண்டேன் (எ)

3. மங்கைவந்தால் மாளிகைக்கி போரும் அந்த (2-தடவை)
எந்தனுட மனம் ஆசைதீரும் எந்த விதத்தாலும
அந்த சுந்தரியைக்கொண்டுவரக் கொண்டேன்
எண்ணம் கொண்டேன் (எ)

(14-வது கட்டம்) ஸ்ரீராமபாதமா என்றமெட்டு,

பல்லவி.

மாமாரீசனே மான்வேஷங்கொண்டுமே
மங்கை ஜானகியாளிடம் இந்தக்ஷணம் செல்லுவாய்

அநுபல்லவி.

பஞ்சவடி தன்னிலே கொஞ்சுங்கிளிபோலே
வஞ்சிக்கொடியாளே தங்கை கண்டுவந்தாளே

சரணம்.

யாகசாலையில் வந்த ராமருட தேவியை
சிந்தைதன்னில இச்சைகொண்டால் பின்னும்வருமே (மா)

(2-ச)

இந்தக்ஷணம் செல்லுவாய் ஸௌந்தரியாளிடத்தில்
தங்கனிறமானகத் தரித்துச் செல்வாயே (மா)

(15-வது கட்டம்) க்ஷீராப்திசயனஞ்ஞ என்றமெட்டு)

பல்லவி.

மானும் வருகிறதாம் பஞ்சவடியை நாடி (மா)

மங்கையந்த ஜானகியும் கண்டுமகிழ்ந்திடவே (மா)

மின்னலைப்போல் மின்னுரதாம் மேனிகள் ஜொலிக்கிரதாம்
சுந்தரியாள் ஜானகியும் சிந்தைப்ரமித்திடவே (மா)
தங்கனிரமானும் வந்து தழுவிவிளையாடுதே
மகிழ்ந்து விளையாடநானும மன்னநீரும் பிடியும் என்றாள் (மா)
மங்கையவள் சொல்லலுமே மதிமயங்கி லெக்ஷ்மணர்
மாயமானுய்த் தோணுரதே மதினியரே சொன்னேனென்றார் (மா)
மான்பிடித்து தராவிட்டால் மனவருத்தமாகுமே
இந்தக்ஷணம் சென்று எந்தன் நாதாமானைப் பிடியுமென்றாள் (மா)

(16-வது கட்டம்) பாளவாய்க்கமுகில் என்றமெட்டு.

பல்லவி.

1 தங்கமான் பிடித்துவர சாமிரெகுராமர் சென்றார்
ஜானகிபாளண்டைவந்தான் ராவணன் சன்யாசி வேஷங்
கொண்டு வந்தான் ராவணன் (த)

2. மெத்தபசியாலே எந்தன் சித்தமிக வாடிவந்தேன்
உத்தமியே எந்தன் பசியாற்றுவாய் பெண்ணே (உ)

3. பக்தியுடன் ஜானகியும் பழவகைகள் தானெடுத்து
பணிந்துஉபசாரம் செய்தாள் மங்கையும் அப்போபணிந்து (உ)

4. அன்னநடை மாதரசே உந்தன் மீதில்
மோஹம்கொண்டு வந்தேனடி இவ்வனத்தில்
நானுமே பெண்ணே வாய்திறந்து பேசடி என் அன்னமே

5. அந்தவார்த்தை கேட்டஉடன் சுந்தரி மிகநடுங்கி
ஹரிராகவரே வாருமென்று கூறினாள் ஹரிராகவரே (வா

6 தீரரெகு ராமருட தேவியரைத் தேரில்கொண்டு
தென்னிலங்கை தன்னில்சென்றான் ராவணன் அப்போ (தெ)

7. சீதையரை லெங்கைவைத்து திருசடையைக்காவல்வைத்து
சிரித்துப் பகட்டுகிறான் ராவணன் அப்போ, (சிரி)

(17-வது கட்டம்) காக்ஷிகண் காக்ஷியே என்றமெட்டு.

பல்லவி.

அன்னமே வாராயோடி எநதனுடைய ஆசையைத் தீராயோடி
பர்ணகாசாலைபி லுன்னைப்பார்த்துக்கொண்டு வந்தேனடி (அன்)

அநுபல்லவி.

வர்ணக்கிளிமேனியாளே வாய்திறந்து பேசாயோடி
வந்தேனடி யவ்வனத்தில் உந்தன் மீதில் மோஹங்கொண்டு
அந்தரங்கமுள்ள எந்தன் சகியே அழகில்ச் சிறந்த கண்மணியே
பாராயோடி என்னைச்சேராயோடி கண்ணே வாராயோடி
பெண்ணே (அ)

இன்னம் வாது செய்பலாமோ அன்னனடை மாதரசே
மன்னன் ராமராமரென்று மனசஞ்சலம் கொள்ளுகிருய்
அஞ்சவேண்டாம் இந்தக்ஷணம் வாராய்
வந்து எந்தன் மாளிகையைப்பாராய் திராதி தீரன்
ஜெகத்துக்கதிகாரன் ப்ரதாப லெங்கேஸ்வரன் (அ)

(18-வது கட்டம்) துடிபினமோரி என்றமெட்டு.

பல்லவி.

என்னபுத்தி நினைந்தாயோடா லெங்காபுரி ராவணு
மன்னன் ரெகுராமர் தேவி ஜானகியாளே

அநுபல்லவி.

மாயமானை ஒட்டி மறைவாக நின்று கபடசந்
யாசிவேஷம் கொண்டுவந்த ராவணு (என்)

சரணம்.

தீரரெகுராமர் கண்டால் சின்னபின்னம் செய்திடுவார்
சிந்தையிலெண்ணுதே ஸ்ரீராமர் தேவியாளே (எ)

(19-வது கட்டம்) திருப்புகழ் வங்கார மார்பிலணி என்றமெட்டு.

1. மானே உன்மீதில் மையல்கொண்டு உன்னைத்தேடி வந்தேன்
தேனே என் தேஜஸுவடிவு தன்னை பாராயோ
எந்தனுட செல்லத்துக்கு ஏற்ற மங்கையாளே
உன்னைக்கண்டேன் நான்

2. அன்னம்போலே நடையழகி உந்தனுட வடிவழகை
எந்தனுட தங்கைசொல்ல சிந்தைதன்னில் மேகங்கொண்டு
அந்தரங்க ப்ரீதிகொண்டு வந்தேனடி உந்தனிடம் (மட)

3. சுந்தரமே உந்தன்முகம் சந்திரன்போல் விளங்கிரு
தையலரே எந்தனுட மையல்களை தீர்த்திடுவாய்
மங்கையரே எந்தனுட மாமயிலே கண்மணியே (மட)

14844
சென்னை-600 008.
Q22547

(20-வது கட்டம்) ராமானந்த வனமிதோ பார் என்றமெட்டு.

பல்லவி.

கெஞ்சிக்கொஞ்சவு மனம் அஞ்சலியோ பகரே
எந்தனைப்பார்த்து (கெஞ்)

அநுபல்லவி.

அன்னை கௌசலையாள் மைந்தன் ரெகுராமர் வந்தால்
அப்போதெரியும் உந்தன் சிந்தை கெர்வம் அறிவார் (கெஞ்)

சரணம்.

மன்னுநீதி மன்னன் ரெகுராமர் தம்பியுடனே கூடி
யிருபேரிங்கேவந்தால் உந்தனுடையமோடி கெர்வங்களை அரிவார்
தீரகோதண்டபாணி ரெகுராமர் தேவி என்று
எண்ணுமலேல சிந்தையஞ்சாமலே (கெஞ்சி)

(21-வது கட்டம்) கற்பகத்தருவை என்றமெட்டு.

பல்லவி.

1. மைதலியாள் சொன்ன வார்த்தையைக்கேட்டு மானைப்
பிடிக்கச் சென்றார்-மாயமானாய் வந்த மாரிஜனைவென்று
பர்ணகாசாலையில் வந்தார் ராமர் (பர்)

அ.

2. தேவியைக் காணுமல் தயங்கி ஸ்ரீராமர் தேடி எங்கிலும்
பார்த்தார்-தம்பியும் தானும் தயங்கியே நின்று
ஜானகியே எவ்விடம் சென்றாய் எந்தன் (ஜா)
3. சிரிங்காரமயிலே ஜெனகண்மணியே தேவியே எவ்விடம்
சென்றாய்-உந்தனைக்காணுமல் சிந்தை மிகவாடுரேன்
அந்தரங்க சிதா எந்தன் (அ)

(22-வது கட்டம்) ஜோர்தூர் என்றமெட்டு.

பல்லவி.

1 கண்மணியே சிதயரே எவ்விடம் சென்றாயோ நீ
உந்தனை நான் காணுமலே சிந்தை மிக வாடுரேனே (கண்)
2 தடாகந்தனில் சென்றாலும் காமதங்களாச்சுதே
வாராயோடி கண்மணியே வந்து எந்தனுடன் பேசாயோடி
(கண்)

(23-வது கட்டம்) நலங்கிடவாரும் ராஜா என்றமெட்டு,

1 தாசரதியும் தம்பியநும் ஜானகியைக் காணுமலே
வனந்நிலெல்தும் தேடிக்கொண்டு வருகிறாராம் ராகவரும்

2 மைதலியே சீதபமே மகிழ்ந்து விளையாட நீயுமே
மாயமானென்றறியாமலே மன்னவா பிடியுமென்றாய்
3 மான்பிடிக்கப் போனதினால் மங்கையே உன்னைக்காணேனடி
சூதுமானென்று தோணாமல் சுந்தரி பிடிக்கச்சொன்னாய்
4 அலைந்துதேடி வரும்போது ஆஞ்சனேய பாலகனே
கண்டுமே ஸ்ரீராமச்சந்திரர் என் காரிழையைக் காணே
னென்றார் (தாச)

[24-வது கட்டம்] அவதாரமான கண்ணன் என்றமெட்டு

1 தாசன் அனுமானே எந்தன் ஜானகியாள் தன்னை
காணாமலே எங்கும் தேடி வந்தோம் [கா]
2 அந்தரங்கமுள்ள எந்தன் சுந்தரியாள் தன்னை
ஆரோகொண்டுபோன காரணங்களறியேன்

(25-வது கட்டம்) நாகரீகநலங்கிட நாதாவாரும் என்றமெட்டு.

வாரும் ஸ்ரீ ராமச்சந்திரா பாதம் பணிந்தேன்
1 வந்தனங்கள் செய்குரேன் நான் சிந்தைமகிழ [வா]
2 எந்த ஊரு எந்த தேசம் என்று கேழ்க்கவே அயோத்தி
யாளும் தசரதனார் பாலனே நாங்கள் பாலனே நாங்கள்
3 ஆசனங்கள் சமர்ப்பிவித்தேன் அயோத்திராமரே
ஆதரவாய் வீற்றிருங்கள் இருபேருமாய் இருபேருமாய்

(26-வது கட்டம்) சேந்தின்மானகர் என்றமெட்டு,

ஆஞ்சனேய பாலா அன்னை ஜானகியை காணாமலே
மனம் வாடுரேன் இப்போ காணாமலே மனம் வாடுரேன்
2 பர்ணசாலை தன்னிலிருக்கும்போது பசட்டிமானகவே வந்து
தே அங்கே

முடுகு

அந்த மானைக்கண்டு மயக்கி ஜானகி மன்னவா பிடியுமென்றாளே.
3 மானைப்பிடிக்கச் சென்றுவரும்போது மங்கையர்
தன்னைநான் காணேனே எந்தன் மங்
தங்கமான்வந்து தழுவியழைத்ததை-தாசனே
நானென்ன சொல்லுவேன்- அந்த மாய்கையை
நானென்ன சொல்லுவேன்

முடுகு.

அந்த மானைக்கண்டு மயங்கி ஜானகி மன்னவா பிடியுமென்றாளே
மானைபிடிக்கச் சென்று வரும்போது மங்கையர்

தன்னைநான் ஆண்மைனே எந்தன் [மப]

(27-வது கட்டம்) திருப்புகள் நாதபிந்துகளாதி என்றமெட்டு.

1 அம்பிகைதன்னை நான் கண்டு வருகிறேன்
அடையாளம் கையில்கொண்டு வருகிறேன்
அரைக்ஷணம் தன்னில்போய் வருகிறேன் [ரெகுராமா]
2 சரணமாகினேன் சாமி [ரெகுராமா]
ஜானகிமானை நான் கண்டுவருகிறேன்
தயங்கவேண்டாம் மதிமயங்கவேண்டாம்எந்தன் (ரெகுராமா)

[28-வது கட்டம்] கருவிநுரு வாகிவந்து என்றமெட்டு.

1 மங்கைதன்னைக் கண்டுவாரேன் மன்னன் ரெகுராமச்சந்திரா
மனக்கவலை கொள்ளவேண்டாம் (ரெகுராமா)
2 ஸ்ரீரெகுராமாஉந்தன் தேவிதன்னைக் கண்டுவர
க்ஷணந்தனிலே போய்வருவேன் [ரெகுராமா]
3 எந்தனுட தேவியற்கு சிந்தை அடையாளம் காண
தந்தேன் கணையாழிதன்னை கைக்கொள்ளும்
4 வாங்கிக் கணையாழிதன்னை வாஞ்சையுடனே
அனுமார் தேவியைத் தேடிவரச் சென்றாராம்
5 தேடி எங்கும் காணாமலே தென்னிலங்கை தன்னில்கண்டு
கணையாழியைக் கைக்கொடுத்தார் ரெகுதூதன்

[29-வது கட்டம்] வேகமுடன் நலங்கிடஎன்றமெட்டு

பல்லவி.

கணையாழியைக்கண்டு சீதை காக்ஷியுடனே மகிழ்ந்தாள்

அ.

1 ஜானகி கணையாழியைக்கண்டாள் ஆனந்தம் மிகக்கொண்
டாள்-அபிராமரைக் கண்டதுபோலே அன்னைஜானகியும் [க]

ச.

2 சுந்தரி அன்னை ஜானகியும் சூடாமணி கொடுத்து
ஆஞ்சனேய பாலன்கையில்கொண்டு அபிராமரைப்பணிந்து
கண்டேன்நான் தேவியைகொண்டேன் சூடாமணியை (கணை)

[30-வது கட்டம்] நாதாபழனி என்றமெட்டு.

பல்லவி.

1 கண்டேன் தேவியை சாமி ரெகுராமர் ஜானகி
தனனை கண்டேன் தேவியை

அ.

கண்டேன் தேவியைக் கண்டேன்
கண்டேன சீதையைக் கண்டேன்
கண்டேன் ஜானகியைக் கண்டேன்,
கண்டேன தேவியை கணையாழியைக் கொடுத்தேன்
சூடாமணியைக்கொண்டேன ஸாமி ரெகுராமனைக்
கண்டேன் [தேவியை)

முடுகு,

தென்னிலங்கை தன்னில் சுபவிருக்ஷம்தனிலே அன்னையைக்
கண்டுவந்தேன்-அபிராமச்சந்திரமே கண்டேன் தேவியை
2 அரக்கர் தன்னை ஜெயித்து [2] தடவை
அரக்கர் தன்னை ஜெயித்து அன்னை ஜானகியை
அழைத்துக்கொண்டுவர வாரும் ராகவா ஸாமி ரெகுராம
ஜானகிதனை (கண்டே)

[31-வது கட்டம்] திருடனடி முரடனடி என்றமெட்டு

1 வாரும் ரெகுராமச்சந்திரா வாஞ்சையுள்ள தீரனே
கோரக்சர் தன்னைவென்று கொண்டுவர தேவியை (வாரும்)
2 பக்ஷமுள்ள லெக்ஷ்மணர் சுக்ரீபர் அனுமானுடன்
லெக்ஷிமியை கொண்டுபோன ராவணனை ஜெயித்திட வாரும்
3 வில்வளைத்து அம்பெடுத்து வீரரெகு ராமச்சந்திரர்
வேகத்துடன தானகடந்துவந்தார் தென்னிலங்கைநாடி (வா)

(32-வது கட்டம்) நலிங்கிட அழைத்தேன் நாதனே என்றமெட்டு,

1 எழுவது வள்ளச்சேனையுடன கூடி ராமர் எதர்த்து
வந்தார் லெங்காபுரியைநாடி பாவசஅனுமார் தோள்தனில் ஏறி
பக்கம்தனில் லெக்ஷ்மணர் சுக்ரீபருடனே கூடி (எ)
2 தெசமுகனை ஜெயித்து தேவியன்னை ஜானகியை
செழிக்கும் அயோத்திமா நகரில் வந்தார்
ஸ்ரீராமர் பட்டாபிஷேகம் சூட்டிக்கொண்டார் (எ)

(33-வது கட்டம்)

(பட்டாபிஷேகம்) காக்ஷிகண் காக்ஷியே என்றமெட்டு.

பல்லவி.

1 மகுடமுடி சூடி ஒர் மங்கை ஜானகியுடன் சிம்மாசனம்
அமர்ந்து (மகுட)

அநுபல்லவி.

மகரத்தோரணம் கட்டி மண்டபம் அலங்கரித்து
மாணிக்கத்தூண் நாட்டி மத்தகெஜங்கள் கட்டி

முடுகு,

விசித்திரமான கண்ணாடி மாட்டி
பளபளப்பாய் எங்கிலும் குளோப்பர்களை கட்டி
சிங்கார அலங்கார மங்களமுடி சூடி (மகு--)

சரணம்.

2 மங்கை ஜானகியுடன் மகிழ்ந்து சிம்மாஸனத்தில்
சந்தோஷமாய் அமர்ந்து தம்பிமார்கள் பக்கம் சூழ

முடுகு,

அங்கமுடன அனுமார்பாதம் தழுவ ராமர் அங்கம் பூரித்து
மனமகிழ
மங்கையரெல்லோரும் மங்களம் பாடிவர (ம)

2-வது சரணம்

முப்பத்தி முக்கோடி தேவர் மலர் சொரிய
நாற்பத்தெண்ணாயிர ரிஷிகள் சந்தோஷிக்கச்

முடுகு.

ரம்பை ஊர்வசி நடனமாட
திவ்யமங்கள பேரிகை வாத்யம் முழங்க
இந்திராதி தேவர்கள்-புஷ்பமலர் சொரிய
(மகுடமுடி சூடினார்)

ஸ்ரீ ராமாவதாரம் முற்றிற்று.

[சுபம்—சுபம்—சுபம்.)

---

092:447 N28
1484694
-600 0